# மாகாணக்கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

## நிலையறி பரீட்சை – 2021

தரம் 9 | தமிழ் | நேரம் -2 மணித்தியாலங்கள்

பகுதி 1

1) மிகப்பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக

01.“அல்லவை தேய அறம் பெருகும்” இங்கு **அறம்** என்பதன் ஒத்தசொல்

1. மறம் 2. அகம் 3.தர்மம் 4. ஞானம்

02. “இருளின் நிறைவு தனி வசீகரம்” இங்கு **வசீகரம்** என்பதன் ஒத்தசொல்

1.அழகு 2. வசை 3. கைவரிசை 4. அலங்கரிப்பு

03. நம்பிக்கை ஊட்டி விட்டு எழுந்து நடக்கிறேன். **நம்பிக்கை** என்பதன் எதிர்ச்சொல்

1. ஏளனம் 2. அவநம்பிக்கை 3. ஏமாற்றம் 4. உறுதி

04. “தந்தை மகளுக்கு எழுதிய கடிதம்” **தந்தை** என்பதன் எதிர்ப்பாற் சொல்

1. தாதை 2. ஐயா 3.மகள் 4.தாய்

05. நேற்று வீசிய காற்றிற்கு அன்ரனா (Antenna) முறிந்துவிட்டது. **அன்ரனா** என்பதன் தமிழ் வடிவம்

1.உணர்கொம்பு 2.கம்பி 3.தடி 4.மரம்

06. நதி, வழி, ஒழுக்கம்,தணி ஆகிய பல பொருளைக் குறிக்கும் ஒருசொல்

1.ஆறு 2. பாதை 3. ஆற்று 4. தர்மம்

07. “பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை” எனும் பழமொழி உணர்த்தும் பொருள்

1.சிறப்பு 2.ஏழ்மை 3.போலிநாகரிகம் 4.திறமை

08. யானைக்குப் **போதகம்** போல சிங்கத்திற்கு

1.குருளை 2.குட்டி 3.பிள்ளை 4.கன்று

09. அந்தப் பேரொலியைக் கேட்டு நான் கிடுகிடுத்துப் போனேன். இங்கு ''கிடுகிடுத்தல்'' என்னும் இரட்டைக்கிளவியின் பொருள்

1. நடுநடுங்குதல்  2. கோபம்அடைதல்
3. சினம்ஏற்படல்  4. மகிழ்ச்சியடைதல்

10. ''பாரதியார் சிறந்த கவிஞர்'' என்று மக்கள் போற்றுகின்றனர் இது

1. கூட்டுவாக்கியம்  2. தனி வாக்கியம்
3. கலப்புவாக்கியம்  4. ஏவல் வாக்கியம்

11. ''நான்கு மணி பூத்தது''. இங்கு இடம் பெறும் ஆகுபெயர்

1 இடவாகுபெயர்  2. காலவாகுபெயர்
3. சினையாகுபெயர்  4. பொருளாகுபெயர்

12. ''அவர் பாடம் சொல்லிக் கொடுத்தார்.'' இங்கு சொல்லிக் கொடுத்தார் என்பது

1. கூட்டுவினை  2. தனிவினை
3. ஏவல்வினை  4. வியங்கோள்வினை

13. பெயருடன் பெயர் இணைந்த கூட்டுப்பெயராக அமையாதது

1. வானவில்  2. எழுதுகோல்  3. நீலவானம்  4. பழரசம்

14. பின்வரும் வாக்கியங்களில் ஏழாம் வேற்றுமையாக அமைவது

1. விரலின் கண் மோதிரம்  2. மரத்தினாலான கட்டில்
3. வீட்டிலிருந்து வந்தான்  4. தசரதனுக்கு மகன் இராமன்

15. செயப்படுபொருள் அல்லாத வாக்கியம்

1. நான் பாட்டுப்பாடினேன்
2. அம்மாகோவிலுக்குப் போனார்.
3. கம்பர் கம்பராமாயணத்தை இயற்றினார்
4. அப்பாவிடம் இருந்துபெற்றுக் கொண்டேன்

16. நாங்கள் போனோம் இவ்வாக்கியம்

1. தன்மைஒருமை  2. முன்னிலை ஒருமை
3. முன்னிலைப் பன்மை  4. தன்மைப் பன்மை

17. பின்வரும் சொற்களில் காரண இடுகுறிப் பெயராக அமைவது

1. கணனி  2. மாமரம்  3. நாற்காலி  4. பறவை

18. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை

1. 26 2. 206 3. 216 4. 247

19. ஐம்பதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா

1. பொன்விழா 2. மணிவிழா 3. பவளவிழா 4. வெண்கலவிழா

20. ஒழுங்கற்றுக் காணப்படும் வாக்கியங்களை பொருள் தரக் கூடியவகையில் ஒழுங்குபடுத்துக.

அ. கண்ணனின் அருளால் வறுமை நீங்கியது

ஆ. கண்ணனும் குசேலரும் சாந்தீபமுனிவரிடம் கல்வி கற்றனர்

இ. குசேலர் வறுமையுற்ற போது கண்ணனை நாடினார்

ஈ. கண்ணனிடம் போகும் போது அவற்பொரி எடுத்துச் சென்றார்.

உ இருவரும் இணைபிரியாத நண்பர்கள்.

1. ஆ, உ, இ, ஈ, அ 2. உ, இ, ஆ, ஈ, அ

3. ஆ, இ, உ, ஈ, அ 4. ஆ, இ, ஈ, உ, அ

20×1 = 20 புள்ளிகள்

## பகுதி 2

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களிற்கு குறையாமல் கட்டுரை வரைக

1. சுத்தம் பேணி சுகமாய் வாழ்வோம்
2. தமிழ் மொழியின் சிறப்பு
3. உழவுத் தொழிலின் மேன்மை
4. இணைய வழிக்கல்வியும் மாணவர்களும்

20 புள்ளிகள்

02. கொரோனாவின் இடர்கால விடுமுறையின் போது நேரத்தினைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்குப் "புத்தகங்களை வாசிப்பதே சிறந்தது" என்பதனை விளக்கி 75 சொற்களில் உமது நண்பனுக்கு கடிதம் எழுதுக.

10 புள்ளிகள்

03. பின்வரும் வினாக்களில் எவையேனும் ஆறு வினாக்களிற்கு விடை தருக.

1. செய்யும் தொழிலே தெய்வம் என்ற தலைப்பில் கவிதை எழுதியவர் யார்?
2. ஒரு மனிதனின் தாழ்வுச் சிக்கலுக்குக் காரணமாக அமையும் உணர்ச்சிகள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. மாறுவேடம் என்பதன் பொருள் யாது?
4. சொற்பொழிவாளனுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் மூன்று தருக.
5. "அல்லவை தேய அறம் பெரும் நல்லவை நாடி இனிய சொல்லின்" இக் குறட்பாவின் பொருளினைத் தருக
6. "ஒரு சின்னஞ் சிறு பூச்சி" என்ற சிறுகதை இடம் பெற்றுள்ள தொகுதி எது?
7. ஆகுபெயர் என்றால் என்ன? ஒரு ஆகுபெயரினை உதாரணத்துடன் விளக்குக.

8. ஏழாம் வேற்றுமையில் பொருள் இடமாதல், தொழில் இடமாதல், குணம் இடமாதல் இவற்றிற்கு ஒவ்வொர் உதாரணம் தருக

18 புள்ளிகள்

04. பின்வரும் வாக்கியத் தொடர்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டது என எழுதுக.

1. ''மன்னிக்க வேண்டும் சேர் மறுபடியும் பாடத்தைப் படிப்பிக்க வேண்டும்''
2. ''நறுமணத்தைப் பற்றியும் குணத்தைப் பற்றியும் நீயா பேசுகின்றாய்.''
3. ''இதைதேனில் குழைத்து சாப்பிடக் கொடுங்க குணமாகிடும்''

6 புள்ளிகள்

05. பாடலைக் கிரகித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே– உலகில்
ஏற்றம் புரியவந்தாய்

ஓடி வருகையிலே– கண்ணம்மா
உள்ளங் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப் போய்
ஆவி தழுவுதடி

1. இப் பாடலில் கண்ணம்மா செய்யும் செயல்கள் இரண்டு தருக.
2. கண்ணம்மாவின் செயல்களால் ஏற்படும் மகிழ்ச்சிகள் இரண்டு தருக.
3. களஞ்சியம் என்பதன் பொருள் யாது?
4. கவிஞனின் உள்ளங் குளிரக் காரணம் யாது?
5. ஒத்தபொருள் தருக
    1. ஆவி
    2. கலி

10 புள்ளிகள்

06. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக

1. விடிய விடிய
2. சலசல
3. பென்னம் பெரிய
4. ஒளிவுமறைவு
5. குளுகுளு

10 புள்ளிகள்

07. அ) எழுத்துப் பிழைகளை இனங்கண்டு திருத்தி மீண்டும் எழுதுக.

பசி என்பது ஜீவராசிகளுக்கு, குறிப்பாக மானிடருக்கு இயற்க்கை. அது தீர்க்கப்பட வேண்டும். ஆகவே உணவு கொடுக்கப்படவேண்டும். பசியும் அதை தீர்க்கும் வளியும் மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4புள்ளிகள்

ஆ) பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் பொருள் மயக்கத்தினை நீக்கி மீண்டும் எழுதுக.

1. காலஞ்சென்ற வாமதேவனின் தந்தையாரின் பெயரால் மணிமண்டபம் ஒன்று கட்டப்படுகின்றது.
2. தோட்டத்திலுள்ள காற்றினால் முறிக்கப்பட்ட மரக்கிளைகள் அங்கிருந்து அகற்றப்பட்டன.

2 புள்ளிகள்